# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 28481235

டிடிவி தினகரன்

பொதுச்செயலாளர்


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 23-10-2022

## இனிய தீபாவளி நல்வாழ்த்துகள் !

**தீபாவளி திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

பலவிதமான பண்டிகைகளை நாம் கொண்டாடினாலும், தீபாவளிக்கு இருக்கிற உற்சாகம் எப்போதுமே சிறப்பு வாய்ந்தது. புத்தாடை, இனிப்பு, பட்டாசு என தீபாவளியின் ஒவ்வொரு அம்சமும் கொண்டாட்டமானது. அதைப்போலவே, மனித சமூகத்திற்கு **'அதர்மம் நிலைக்காது; தர்மம் வெல்லும்'** என்கிற நீதியைச் சொல்லும் திருநாளாகவும் தீபாவளி அமைந்திருக்கிறது.

தீமைகள் எல்லாம் விலகி, நன்மைகள் பெரும் வெளிச்சமாக பரவட்டும், ஒவ்வொருவரிடமும் மகிழ்ச்சியும், ஆரோக்கியமும் நிறைந்து அன்பு தழைக்கட்டும்.

**உள்ளும் புறமும் உயர்ந்த சிந்தனைகளோடு இருளை அகற்றி, அனைவரும் ஆனந்தமாக வாழ்ந்திட தீபாவளி திருநாள் வழிகாட்டட்டும்.**

**டிடிவி தினகரன்**